*கவனிக்க.- 28.04.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2018 - 2017 මැයි මස 05 වැනි සිකුරාදා - 2017.05.05

*2018 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 790 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** பெனசோமா பிரன்ட்சிப் பௌன்டேசன் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, மே மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, மே மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

789- B81168 - 5,403 (2017/05)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

குண்டசாலை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 139 ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய குண்டசாலை பிரதேச சபை 2017.03.27 ஆம் திகதி 117/2017 இலக்கத் தீர்மானத்தின்படி பின்வரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.*

எஸ். ஆர். அதாவுத,
செயலாளர்
குண்டசாலை பிரதேச சபை.

*2017, மார்சு 27.*

*"1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 139 ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய குண்டசாலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள மதிப்பீட்டு வரிக்கான கருமங்களுக்குரிய ஏதேனும் வீடு, கட்டடம், காணி அல்லது வீட்டுத்தொடர் தொகுதியொன்றின் பெறுமதியைக் கணிப்பிடும் கருமத்துக்காகவோ அல்லது பயிர்ச்செய்கை வரிக்கான கருமங்களுக்கெனப் பயிரிடப்பட்டுள்ள ஏதேனும் காணியொன்றின் பரப்பளவைக் கணிப்பிடும் கருமத்துக்காகவோ அல்லது பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக் கருமங்களின் திட்டமிடுதலை இலகுபடுத்துவதற்கெனவோ 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவலறியும் உரிமை பற்றிய சட்டத்தன் 3 ஆவது மற்றும் 5 ஆவது பிரிவுகளின் கீழ் தகவற் தொகுதியொன்றை ஆக்கும் கருமங்களுக்கெனவோ, குறித்த ஆதனத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரிடம் அவற்றின் உரிய வாடகை, ஆண்டுப் பெறுமதி அல்லது பரப்பளவையும், ஏனைய விபரங்களையும் பற்றிய தவணை அறிக்கைகளை முன்வைக்குமாறு விதிக்கப்படுதல் வேண்டுமெனக் குண்டசாலை பிரதேச சபையின் அதிகாரங்களையும் கடமைக் கூறுகளையும் செயற்படுத்துவதற்கெனக் குறித்த சட்டத்தின் 9 ஆவது பிரிவின் (3) ஆவது உப பரிவின் கீழ் குறித்த பிரசதேச சபையின் செயலாளராகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நான் இவ்வாறு தீர்மானிக்கின்றேன்".*

*5-100*

---

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) (அ) எனும் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) (அ) எனும் பிரிவின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் 2016.06.17 ஆந் திகதிய 1972 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுள்ள பாதைகள், வீதிகள் சம்பந்தமாக குறித்த கால எல்லைக்குள் எவ்விதமான மறுதலிப்பும் சமர்ப்பிக்கப்பட்டாத காரணமாக குறித்த பாதைகள் மற்றும் வீதிகள் அனைத்தும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உரித்தானவை என ஏற்று நிர்வகிக்கப்படுகின்றன என்பதை பொது மக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.*

தி.சுதர்சன்,
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

*5 - 183*

---

**திக்வெல்ல பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 198ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விசேட விதிமுறைகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 198ஆம் பிரிவின் பிரகாரம் தென் மாகாண முதலமைச்சரின் அங்கீகாரத்துடன், திக்வெல்ல பிரதேச சபையால் இங்கு கீழ் அட்டவணையில் தெளிவாகக் குறிப்பிடப்படும் தொன்மையான பெயர்கள் அடங்கிய பாதைகள், வீதிகளுக்கான பெயர் மாற்றங்கள் செய்யப்பட்டு உத்தேச பெயர்கள், கீழ்க் குறிப்பட்டவாறு பெயரிடப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

எம். எஸ்.ரத்னவீர,
செயலாளர்,
திக்வெல்ல பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
திக்வெல்ல
2017, ஏப்பிறல் 7.*

## அட்டவணை

| தொடர் இல. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி | இலக்கம் | தற்போதைய பெயர் | உத்தேச பெயர் | பாதையின் ஆரம்பம் | பாதையின் முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 1990.11.01 | 222 | இஹலமுள்ள பாதை | ரொனீத மெல் மாவத்தை | ரதம்பல தந்தெனிய பாதை | தந்தெனிய இஹலகொட பாதை |
| 02 | | 1990.11.01 | 166 | உடகங்கொட பாதை | சீ. அலகப்பெரும மாவத்தை | ரதம்பல தந்தெனிய பாதை | தந்தெனிய இஹலகொட பாதை |
| 03 | திக்வெல்ல பிரதேச சபை | 1990.11.01 | 170 | எபகந்த பாதை | ஜினதாச குணவர்தன மாவத்தை | ரதம்பல கிரினெலிய மாவத்தை | வேஹெல்ல தம்மதின்ன மாவத்தை |
| 04 | | 1990.10.01 | 15 | சுபோதாராம பாதை | ஸ்ரீசுகதவன்ச நாஹிமி மாவத்தை | தந்தெனிய முருதகஸ் பிட்டிய பாதையில் றுப்பேகெதர | தந்தெனிய உட அபரெக்க பாதையில் கரந்தெனிய சந்தி |
| 05 | | 2006.09.15 | 04 | பொரலுகெட்டிய பாதை | சுகுனபால சமரசேகர மாவத்தை | வலஸ்கல தந்தெனிய பாதை | கலகம பாதை |
| 06 | | 1986.07.01 | - | விவேகாராம விகாரைக்குச் செல்லும் பாதை | ஸ்ரீவிவேகாராம பாதை | சீ.டபிள்யூ. டீ. பாதை | விவேகாராம விகாரை |

05-06